REGISTERED No. M. 1318.

ஓம்.

நாமகள் நற்றுணை.

தமிழ் மகவு.

புதுவைத் தமிழ்ச்சங்கத்து மாதந்தோறும் வெளிவரும்

தமிழ்ப் பத்திரிகை.

கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினுங் கற்கை நன்றே.

ஆண்டு — ௧. | காளயுக்தி ௵ சித்திரை ௴ 1918-ம் ௵ ஏப்ரல் ௴ | மதி — ௭.

உள்ளுறை:

		பக்கம்.
௧.	டண்டைத் தமிழ்ப்புலவ ரியல்பு.	௭௩.
௨.	பத்துப்பாட்டு.	௭௬.
௩.	பாண்டியன் ஆரியப்படைதந்த நெடுஞ்செழியன்.	௭௯.
௪.	கம்பராமாயணச் சொற்பிரயோகம்.	௮௧.
௫.	தமிழ்ப்பழமை.	௮௨.
௬.	இளமையிற்கல்.	௮௪.

பத்திராசிரியர்:— வீ. துரைசாமி முதலியார்,
கவர்ன்மெண்ட் கல்விச்சாலைத் தமிழ்ப் பண்டிதர்.
புதுவை.

வருடச் சந்தா விவரம்:

உள்ளூர்க்கு ...	௹ ?	வெளிநாட்டுக்கு ...	௹ ௧
வெளியூர்க்கு ...	௹ ஜ	தனிப் பிரதி ...	அணா ௧

௧௬

உறுதியுரை.

நிற்கின்ற போதே நிலையுடை யான்கழல்
கற்கின்ற செய்ம்மின் கழிந்தறும் பாவங்கள்
சொற்குன்ற லின்றித் தொழுமின் றெழுதபின்
மற்றென் றிலாத மணிவிளக் காமே. (திருமந்திரம்.)

ஓர் கதை.

ஒருபாக்கியவான் அழகிய மாளிகைகட்டி எட்டாவது கட்டில் தனது படுக்கையறை யமைத்திருந்தான். அப்பிரபுவின் நண்பன் ஒருவன் வறுமையால் தனது மகனைப் பிரபுவினிடம் செலவுக்கு ஏதேனும் வாங்கிவரச்சொல்லி அனுப்பினான். அப்பிள்ளை பசிதாகத்தோடு பிரபுவினிடம் வந்து தன்றந்தை கருத்தை வெளியிட்டான். பாக்கியவான் தான் கட்டிய வீட்டை ஒவ்வோர் கட்டாகக் காட்டிக்கொண்டுபோய்க் கடைசியாகப் படுக்கையறையைக் காண்பித்தான். அப்பிள்ளை தனவருத்த மெல்லாம் உள்ளடக்கிக்கொண்டு, ஐயா! இந்த இடத்தில் தாங்கள் நின்றுப்போவிருந்து உயிர் நீங்கினால், இத்தனை வாசற்படிகளிலும் வளைத்துவளைத்து எடுத்துக்கொண்டு போம்போது சங்கடமாயிருக்குமே யென்றான். பாக்கியவான் கேட்டு இதேது நாம் குடிபோவதற்குமுன்னே பொல்லாத அசுபவார்த்தைகளைப் பேசினானென்று வந்தகோபத்தை மனத்திலடக்கிக்கொண்டு நீபோய் உனது தந்தையைவரச்சொல் பேசிக்கொள்ளலாம் என்றான். அவ்வாறே அப்பிள்ளைபோய்த் தந்தையை வரச்செய்தான். அவனுங் காதடைத்துக்கொண்டு தனவானிடம் வந்தான். பிரபு அச்சினேகனையுந் தாகத்துக்கு வேண்டுமா என்றேனும் விசாரியாமல் வீடு முழுவதும் காட்டிக்கொண்டுபோய்த் தன்படுக்கை அறையின்கண் நின்று உன்குமாரன் இப்படிச்சொன்னானென்றான். அதுகேட்ட சிநேகன் அவன் சிறுவனானதையால், ஆலோசிக்காமல் சொல்லிவிட்டான். அதை மனதில் வைக்கலாகாது. அப்படியே நீர் உட்கட்டி லிறந்துவிட்டால், பின்புறச்சுவரை இடித்துவிட்டுத் தாராளமாக எடுத்துக்கொண்டு போகலாம் என்றான். தனவான் கேட்டு இவன் மகனாவது எனக்குமட்டும் சாவு கூறினான் இவன் வீட்டுக்கும் அழிவு நினைத்தானென்று அதிக துக்கமுற்றுச் சற்றுயோசித்துப் பின் யாக்கைநிலையாமையும் செல்வநிலையாமையும் தெரிந்து சிநேகனுக்கு வேண்டிய பொருள் கொடுத்து உபசரித்து அனுப்பினான்.

ஓம்.

நாமகள் நற்றுணை.

தமிழ் மகவு.

புதுவைத் தமிழ்ச்சங்கத்து மாதந்தோறும் வெளிவரும்

தமிழ்ப் பத்திரிகை.

கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினுங் கற்கை நன்றே.

ஆண்டு — க.	காளயுக்தி ௵ சித்திரை மீ 1918-ம் ஆ ஏப்ரல் மீ	மதி — எ.

பண்டைத் தமிழ்ப்புலவ ரியல்பு.

பல்வகைத் தேயத்தாரதும், பல்வகை ஜாதியாரதும் ஒழுக்கங்களும், குணநிகழ்ச்சிகளும் பிரபல்ய மடைதற்கு இன்றியமையாத் துணையுடையது பாஷையாகும். அப்பாஷை ஒருவர்கருத்து மற்றொருவருக்குத் தெரிவிக்கும் பண்புடையது. பாஷையின் பரிபாலனத்தில் ஒற்றுமையும், அபிமானமும் பூண்ட ஜனங்கள் வசிக்குந் தேசமே சகல வளங்களாலுஞ் சிறிதுங் குறைவின்றிச் சிறந்து விளங்கும். ஆகலின், பாஷைகளைப் பல்லாற்றானும் நாடிப் பரிபாலிப்பவர்கள் பரோபகார பரிபாலனர்களே யாவார்கள்.

நமது பாதகண்டத்தின்கண்ணே பல்லாயிரம்யாண்டுகளுக்கு முன்னே தொடங்கி வழங்கப்பெற்ற ஆரியம், தென்றமிழ் என்னுஞ் சீரியபாஷைகள் இரண்டுமே மிக்க தைவிக ஆற்றலும், தக்க இலக்ஷண வரம்புமுடையன. ஆரியத்தை அவலம்பித்தவர்கள் தொகையினும், தேமொழியாகிய தெளிதமிழ் மொழியைப் பரிசீலனஞ்செய்து பாதுகாத்தோர் தொகை குறைவென்றே கருதுகின்றேன். ஆனால், இறைவனும், குமானும் திருநோக்காற் றமிழ் வளர்த்தமையே போதிய கண்யமும் திட்பநுட்ப அமைவும் நந் தமிழிடத்துச் சிவணியது. தமிழுக்கு உற்பத்தியே கிடையாது

"என்றுமுள தென்றமி ழியம்பியிசை கொண்டான்"

என்றான்றோர் புகலுவதா லுண்மைவிளங்கும். இவ்வமிழ்துகு மொழியைத் தான் கல்லாடரும் "உள்ளுதொறுள்ளுதொறுணு வமுதுறைக்குந் திருமுத்தமிழ்" என்றார். இத்தகுதி பூண்ட தமிழை, அழுக்காறு, வஞ்சினம் முதலியனகடிந்து அடக்கம், பொறை, மலைநிகர்மாண்பு, என்றின்னன பலவுடையர்களாய புல வர்கள் நன்கு ஆதரித்தார்கள். அன்புடன் ஆதரிப்பாரை இன் புறுத்தும் பைந்தமிழ்ச் செல்வியின் பண்புணரார் இக்காலத்தும் பலரே. பண்டைக்காலத்துக் காவலரும், நாவலரும், பாவலரும், என்றும் நறுந்தமிழ் வளர்த்த செல்வர்களே! புலவர்களும், அரு ளியல்பும், இலக்கண இயல்பும் வாய்ந்தவர்களே! இயற்றமிழ் இலக்கிய ஆராய்ச்சி குறைந்த ஆங்கில வல்லுநர்கள் போற்றுவது "ஷேக்ஸ்பியர்" முதலியவைகளே! காளிதாச மகாகவிசெய்த ஆரிய நூல்களை அளக்கவல்லவர்யார்? இப்படியே தாரதம்மியந் தேரின், ஆரியமும், செந்தமிழும் ஒன்றோடொன்று சமநிலை யுறும். புலவர்களும் அன்னவாறே சமசாதுரிய முறுவர். நிற்க;

செந்தமிழிலே அருளியற் புலவரோன சேக்கிழார் சுவாமி கள், குமரகுருபர சுவாமிகள் முதலியோர்களும், நச்சினார்க்கினி யர், இளம்பூரணர் முதலிய இயற்புலவர்களாய உரையாசிரியர்க ளும், எத்தனையோ பல ஆற்றல்கள் விளக்கியும் நம்மனோர்புலத்து அவை பொருந்தாவாயினபோலும்! தற்காலம் வளர்ச்சிபெற வேண்டிய செந்தமிழை நாங்களே தாழ்த்திவிட முன்னிற்கின் றோம். எங்ஙனம் எனில்; தமிழை ஆராய்வதும், கற்பதும், கற் பிப்பதும், முறைப்படியில்லை. தமிழ் என்றவுடன் தமிழ் நில வாசிகளாகிய நாங்களே வெறுக்கின்றோம். அநுபூதியருட்செல் வர்கள் "செந்தமிழோ டாரியனை" "வடமொழியுந் தென்றமிழு மானான்கண்டாய்" என்றும், புகழ்ந்தமை வெள்ளிடைமலையெனத் திகழும் என்று வரைந்து புகழ்ந்த்வர்கள் நமது மகான்களே! இந்தியாவினும், யாழ்ப்பாணத்தினும் எத்தனையோ பல புலவர்கள் பண்டைக்காலத்து விளங்கினார்கள். தற்காலத்திலும், தமிழ்ச் சங்கங்கள் சில தோன்றித் தமிழ்ப் பரிபாலனம் நடக்கின்றது.

ராமநாதபுரம் ரவிகுலமுத்து விஜய ரகுநாத பாஸ்கர சேதுபதி மன்னரவர்கள் அருந்தவப்புதல்வராகிய இராஜாராஜேஸ்வர சேதுபதி மகாராஜா அவர்கள் தமிழையும் புலவர்கள் சிலரையும் போற்றி வருகின்றார்கள்.

எனது ஜனனவூராகிய உடுவில் முத்துக்குமார கவிராசர் மிக்க புலவராக விளங்கியவர். எனது தமிழாசிரியர் சுன்னாகம் வித்வசிகாமணி அ. குமாரசுவாமிப் புலவரவர்கள் தாதைதன் றாதைக்குச் சிரேட்டர். இவர் பாடியதாகப் பல செய்யுட்களை வடமொழிப் பொருத்தமாகக் காட்டுவர். இருசெய்யுட்களை மாத்திரம் இங்கே காட்டுகின்றேன்.

கட்டளைக்கலித்துறை.

வாட்டானை யன்னமை தீட்டா விழிமிளிர் மான்மகளைத்
தாட்டானை யாளுக்கு வேட்டானை யன்பர்கள் சஞ்சலங்கள்
மீட்டானை யென்கவி கேட்டானைச் சுன்னையின் மேவுநரை
மாட்டா னருளொரு கோட்டானை நாளும் வணங்குவனே.

கட்டளைக்கலிப்பா.

முடிவி லாதுறை சுன்னகத் தான்வழி
முந்தித் தாவடிக் கொக்குவின் மீதுவந்
தடைய வோர்பெண் கொடிகாமத் தாளசைத்
தானைக்கோட்டை வெளிகட் டுடைவிட்டாள்
உடுவி லான்வரப் பன்னாலை யான்மிக
உருத்த னன்கடம் புற்றமல் லாகத்துத்
தடை விடாதணை யென்று பலாலிகண்
சாரவந்தன ளோரிள வாலையே.

இக்கவி நாமாந்தரிதை என்னும் பிரகேளிகை. நாமாந்தரிதையாவது கருதிய அர்த்தங்களை வேறு நாமங்களிலே மறைத்து வைப்பது. பிரகேளிகை கருதியபொருளை மறைத்து வைக்கும் பாட்டு. இங்கே யுள்ள நாமாந்தரிதைகள் சுன்னாகம், தாவடி, கொக்குவில், கொடிகாமம், ஆனைக்கோட்டை, கட்டுடை, உடுவில், பன்னாலை, மல்லாகம், பலாலி, இளவாலை என்னும் ஊர்ப்பெயர்கள்.

சுன்னுகம் = வெள்ளிமலே. சுல் = வெள்ளி. வழி = மகன். கொக்கு = குதிரை. உடுவிலான் = சந்திரன். உடு = நக்ஷத்திரம். ஆலேயான் = மன்மதன். ஆகம் = சரீரம். பலாலி = பலதுளி.

இப்படியே தனிக்கவிகளும், மடக்குக்கவி, சிலேடைக்கவிகளும் இவாற் பாடப்பட்டன.

அநேக அற்புதங்களை நிகழ்த்திய எத்தனையோ புலவர்கள் பண்டைக்காலத்துவைகித் தமிழ் வளர்த்தார்கள். மேலே சொல்லப்பட்ட எனது ஆசிரியாவர்கள், தற்காலம் அச்சிடுவித்த "தமிழ்ப் புலவர் சரித்திரம்" என்னும் நூலிலே பண்டைப்புலவர்களின் சரித்திரங்களும் தமிழ்த்தலைமைப் புலமையும் இனிது காட்டப்பட்டிருக்கின்றன. அவைகளை அப்புஸ்தகத்திற் பாக்கக் காணலாம். இவை நிற்க;

தற்காலம் தமிழ்ப்பாஷையைச் சென்னை சர்வகலாசங்கத்தினரின் விசேஷ மதிப்பைப் பெறும்படி செய்வதும், பண்டைப் புலவர் சரிதங்களையும் நூல்களையும் நல்லமுறையில் அச்சிட்டு வெளிப்படுத்துவதும், தமிழுடன் ஆங்கிலவார்த்தைகளைக் கலவாது பேச எழுத நமது மாணவர்களைப் பயிற்றுவதும் தமிழ் வளர்ச்சிக்காகச் செய்யும் முயற்சிகளோடு ஆவஸ்யகமானவை என்று நான் கருதுகின்றேன். தமிழ்ப்பாஷைக்குரிய இத்தகைய பத்திரிகைகள் யாவராலும் போற்றப் பெறல்வேண்டு மென்பது ஒருதலையாகும். பிறவிஷயங்களைத் தொகுத்துக் கூற மிக விரியுமாகலின் சுருக்கப்பட்டது. சுபம்.

இங்ஙனம்:

வ. மு. இரத்நேசுவரையர்,

தமிழ்ப்பண்டிதர், விவேகானந்தசபை, மாத்தளை.

பத்துப்பாட்டு.

(சுடு - ம் பக்கத் தொடர்ச்சி.)

கூ—வது மதுரைக்காஞ்சி:—இது எஅஉ - அடிகளுடையது; தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு வீடு

பேற்றினிமித்தம் நிலையாமையைச் செவியறிவுறுத்திப் பாடப்பட்டது. இப்பாட்டிற்கு மாங்குடிமருதனூர் மதுரைக்காஞ்சி யென்று மதுரைப் பெயரானன்றித் திணைப்பெயராற் பெயர்கூறினர். இத்திணைப்பெயர் பன்னிரு படல முதலிய நூல்களாற் கூறிய திணைப்பெயர் அன்று; தொல்காப்பியனார் கூறிய திணைப்பெயரிற் பொருளே இப்பாட்டிற்குப் பொருளாகக் கோடலின் என்க. மதுரைக் காஞ்சியென்றதற்கு, மதுரையிடத்து அரசர்க்குக் கூறிய காஞ்சியென்று பொருள் விரிக்க. இது உருபும் பொருளும் உடன்றொக்கதொகை. காஞ்சித்திணையாவது வீடுபேறு நிமித்தமாகப் பல்வேறு நிலையாமையைச் சான்றோர் அறையுங் குறிப்பினது என்பது பொருள்.

இதில் அப்பாண்டியனது முன்னோர் பெருமையும், பாண்டி நாட்டின் ஐந்திணைவளங்களும், மதுரையின் வனப்பும், நெடுஞ்செழியனது வீரமும், பிறவும் கூறப்பட்டுள்ளன.

இப்பாட்டு "ஓங்குதிரை வியன்பரப்பின்" எனத்தொடங்கி

"வரைந்துநீபெற்ற நல்லூழியையே" எனமுடிந்துளது.

"காலென்னக் கடிதுராஅய் – நாடுகெட எரிபரப்பி
ஆலங்கானத் தஞ்சுவரவிறுத் – தரசுபட வமருழக்கி
முரசுகொண்டு களம்வேட்ட – அடுதிறலுயர் புகழ்வேந்தே
நட்டவர்குடி யுயர்க்குவை – செற்றவரரசுபெயர்க்குவை"

"விரிகடல் வியன்றானையொடு – முருகுறழத்தலைச்சென்
றகல்விசும்பினார்ப்பிமிழப் – பெயலுறழக்கணைசிதறி
......................செற்றதெவ்வர் நின்வழிநடப்ப"

"உயர்நிலையுலக மமிழ்தொடுபெறினும்
பொய்சேணீங்கிய வாய்நட்பினையே
முழங்குகடலேணி மலர்தலையுலகமோ
டுயர்ந்ததேளத்து விழுமியோர்வரினும்
பகைவர்க்கஞ்சிப் பணிந்தொழுகலையே
தென்புலமருங்கின் விண்டுநிறைய
வாணன்வைத்த விழுநிதிபெறினும்
பழிநமக்கொழுக வென்னாய்விழுநிதி
யீதலுள்ளமொ டிசைவேட்குவையே"

"யாவரும்வருகவே ஞெருந்தம்மென
வரையாவாயிற் செறாஅதிருந்து

பாணர்வருக பாட்டியர்வருக
யாணர்ப்புலவரொடு வயிரியர்வருகென
இருங்கிளைபுரக்கு மிரவலர்க்கெல்லாம்
கொடிஞ்சிநெடுந்தேர் களிற்றொடும்வீசி"
"அரியதந்து குடியகற்றிப்
பெரியகற்று இசைவிளக்கி
முந்நீர்நாப்பண் ஞாயிறுபோலவும்
பன்மீனடுவட் டிங்கள்போலவும்
பூத்தசுற்றமொடு பொலிந்தினிதுவிளங்கி
... ...
விளங்கிழைமகளிர் பொலங்கலத்தேந்திய
மணங்கமழ்தேறன் மடுப்பநாளும்
மகிழ்ந்தினி துறைமதிபெரும"

இவற்றால், அப்பாண்டியனது வீரம், கொடைமுதலிய குணவிசேடங்கள் கூறப்பட்டன காண்க.

இந்நூலின் திரண்டகருத்து:—"உயர்ந்தோர்மருகனே! நெடியோனும்பலே! பொருந! கொற்றவ! வெல்கோவே! புகழ்வேந்தே! போரேறே! குரிசிலே! நீ கொற்றவர்தங்கோனாகுவை; வாய்நட்பினை; பணிந்தொழுகலை; பழிநமக் கொழுகவென்னாய்; இசை வேட்குவை; அனையாய்! நின் கொற்றம் பிறையிற்சிறக்க. நின்தெவ்வராக்கம் மதியிற் கெடுக. நின் நல்லிசைகெடாது நிலைக்க. இனி நீ நான்மாடக்கூடன் மதுரை நகரிலே, நாளோலக்க மிருக்கு மண்டபத்தே இருந்து, புலவரொடு பாணர்வருக, பாட்டியர்வருக, வயிரியர்வருக வென அழைத்து, அவர் காட்டின யாசகர்க்கெல்லாம் நீர் யாரென்னாது, தேரைக்களிற்றோடுவீசி, அரியபொருள்கள் தந்து குடிகளைப்பெருக்கி, நற்பொருள்களை விளங்கக் கூறிய நூல்களைக்கற்று, புகழ்நிறுத்தி, ஞாயிறுபோலவுந் திங்கள்போலவும் சுற்றமொடு பொலிந்து விளங்கி வாழி. நின்போல் வாழ்ந்து பிறப்பு நீக்க முயலாது கழிந்த அரசர்கள் திரைஇடு மணலினும் பலரேகாண். அண்ணலே! நீயும் அவ்வாறு கழியலாகாது. இவ்வாழ்விற் பெரியதொரு பொருள் யான் கூறுவேன்; அஃது என்னாற் காட்டுதற்கரியது. அதனைத் தொல்லாணை நல்லாசிரியரிடத்தே கேட்க. கேட்டு இனிதாகப் பேரின்பம் நுகர்ந்திருப்பாய். ஐம்பொறிகட்கு முன்னிற்கும் நுகர்பொருள்கட்டு நின்னொடு என்ன உறவுண்டு. இனி நின்னிடத்துண்டாம் மாயை கெடுவதாக" என்க. (தொடரும்)

பத்திராசிரியர்.

பாண்டியன் ஆரியப்படைதந்த நெடுஞ்செழியன்.

(௬௩ - ம் பக்கத் தொடர்ச்சி.)

ஸ்ரீமான் ராவ்பகதூர் S. கிருஷ்ணசாமி ஐயங்காரவர்கள் "கரிகாலன், உக்ரபாண்டியன், செங்குட்டுவனது முன்னோன் நெடுஞ்சேரல் ஆதன் மூவரும் தங்கள் இலச்சினைகளை (அடையாளங்களை) இமைய வெற்பில் பொறித்ததாகக் கூறுகின்றனர். சிலப்பதிகாரம் 17-வது காதை அக்காலத்து ஆண்ட பாண்டிய மன்னனையே இவ்வாறு தன் இலச்சினையைப் பொறித்ததாகக் கூறுகிறது. ஆகையால் புராணங்களிற் கூறப்படுபவனும் கன்னபரம்பரையிற் கூறப்படுபவனும் சிலப்பதிகாரத்திற் சொல்லப்பட்ட அதிர்ஷ்டவீனனான பாண்டியன் நெடுஞ்செழியனைக் குறிக்குமேயன்றி வேறன்று என்றும்; கீழ்க்குறிப்பில் காலஞ்சென்ற கனகசபைப்பிள்ளையவர்கள் உக்ரபாண்டியனைப் பெருநற்கிள்ளியின் காலத்தவன் என்பார்களென்றும்; அங்ஙனமாயின் 'மாலுங் குறளாய் வளர்ந்திரண்டு மாணடியான் ஞாலமுழுது நயந்தளந்த' தையொப்பக்கூறிய செந்நாப்புலவரது குறளடிகள் மணிமேகலையாதி நூல்களிற் பயில விடமில்லையென்றும்; ஆகையான், கானப்பேரெயில் கடந்த உக்ரபாண்டியனே நெடுஞ்செழியன்" என்றும் கூறுவார்கள்.*

காலஞ்சென்ற கனகசபைப்பிள்ளையவர்களோ முதலாம் நெடுஞ்செழியன் வெற்றிவேற்செழியன். இரண்டாநெடுஞ்செழியன் உக்கிரப்பெருவழுதி என்று வரிசைகாட்டுவர் † இவைகளைப்பற்றிச் சிறிது ஆராய்வாம்.

பெருங்காப்பியத்துயர் பெற்றிய தாகிச் சொற்சுவை பொருட்சுவை ததும்பிக் கற்பவர் தமக்குக் காட்டும் பண்பினையுடைய பரஞ்சோதியார் திருவிளையாடற் புராணத்தை எத்தனைதரம் புரட்டிப் புரட்டிப் பார்த்தாலும் யாதொரு செய்தியும் புலப்படக்காண்கிலம். அதனுள் காணப்படும் உக்கிரப் பெருவழுதி சோமசுந்தரபாண்டியனது புத்திரரான உக்கிரப் பெருவழுதியே. இக்கடவுளர்க்கும் நம்மாராய்ச்சிவயப்பட்டார்க்கும் யாதொரு சம்பந்தமுமில்லை யென்பது பலருமறிந்ததே. இக்கொடு வினைக்குக் காரணம் தமிழப் பெயர்களை ஆரியப்பெயர்களாக்கிய ஆலாசிய மஹாத்மியத்தின் மொழிபெயர்ப்பாகப் புராணம் நின்றமையே.

---

* Ancient India p 356
(l'Inde amcienne)

† Madras Review (Revué de Madras) Vol II p 420...425)

இதனை நீக்கிக்கிடைக்கும் ஆதாரம் புறநானூறு ஒன்றே. அத்தொகை நூலுள் வழுதிப்பெயருடையார் பலரே யாயினும் உக்கிரப் பெருவழுதி யென்ற பெயரினை யுடையார் ஒருவரே காணப்படுகின்றார். ஐயூர் மூலங்கிழாரால் 21-வது புறப்பாட்டைப் பெற்றவரும், இராசசூயம் வேட்டபெருநற் கிள்ளியோடனிருந்து ஔவையாரால் பாடப்பெற்ற 367-ம் புறப் பாட்டையும் பெற்றவரும் ஒருவரே யென்பதில் யாதொரு ஐயமுமில்லை.

* * * *

இடர்ப்படா திவர்களைச் சங்கமிரீஇயினார்
முடத்திரு மாறன் முதலா வுக்கிரப்
பெருவழுதி யீறாப் பிறங்கு பாண்டியர்கள்

எனப்பட்டசங்க வாசர்களுள் பிற் கூறப்பட்ட பெரும் புலமை யரசன் இவனே என்பதற்குற்ற சான்று ஒன்றையுங்காணேம். கானப்பே ரெயில்கடந்த என்ற ஒரு அடையும் விசேடிக்கப்படுகிறது. நுண்ணறிவும் பேராற்றலுமுடைய மகாமகோபாத்தியாய ஸ்ரீமத் வே. சாமிநாதையரவர்களோ "இவன் முன்னிலையில் திருக்குறள் அரங்கேற்றப்பட்டது. அவன்கொடுத்த நான் மறையின் மெய்ப்பொருளை என்னும் வெண்பாவே இதற்குத்தக்க சான்றாகும்,...... ..இவன் பெயர் பாண்டியன் உக்கிரப் பெருவழுதியெனவும், உக்கிரப் பெருவழுதியெனவும் பாண்டியன் கானப்பேர்தந்த உக்கிரப் பெருவழுதியெனவும் வழங்கும்" என்பார்.* இக்கூற்றை வலியுறுத்தும் ஆதாரமொன்றையுங் காண்கிலேம்.

இனி, 'புராதன இந்தியா' ஆசிரியர் கூற்றை யாராய்வுழி, இக் கானப் பேரெயில் கடந்தான் இராசசூயம் வேட்ட பெருநற் கிள்ளியோடு உடனிருந்தானென்று காணப்படுவதால்; இவ்விராசசூயம் வேட்டகிள்ளி யாவன் என்பது ஆராயற்பாலது. உருவப் பல்தேர்த் தடக்கை இளஞ் சேட் சென்னியின் குமாரனே கரிகால னுவன். அவனுக்குப் பின்னாண்டவன் சோழன் நலங்கிள்ளி. இவன் சின்னாளே யரசாண்டவனெனத் தோற்றுகிறது. இவன்பின்னோனே கிள்ளிவளவன்.

மாடல மறையோன் மன்னர்க் குரைக்கு நின்
மைத்துன வளவன் கிள்ளியொடு பொருந்தா
வொத்த பண்பின ரொன்பது மன்னர்
இளவரசு பொறாஅர், ஏவல் கேளார்
வளநா டழிக்கு மாண்பின ராதலின்

* புறநானூறு பாடப்பட்டோர் வரலாறு 5.

அன்னவரை வென்று அரசு நிறுத்தினன். இவனுக்குச் சீர்த்தி யென்னு மிராசமாதேவியிடம் பிறந்த உதைய குமரனே மணிமேகலையின் பொருட்டு விச்சாதரனாற் கொல்லப்பட்டவன். இச்சோழனுக்குப் பின்னாண்டவனே இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி. இவனோடு ஒருங்கிருந்தானே கானப் பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதியெனப் புறப்பாட்டில் காணப்படுவதால் நெடுஞ்செழியனும் கானப்பேரெயில் கடந்தானும் ஒருவனன்று. ஆகையால், நெடுஞ் செழியனுக்கும் கானப்பேரெயில் தந்தானுக்கும் யாதொரு பற்றுமில்லை என்றுகொள்வதே அமை வுடைத்தாம்.

S. சோமசுந்தர தேசிகர்,
இலக்கணவிளக்க பரம்பரை,
திருவாரூர்.

கம்பராமாயணச் சொற்பிரயோகம்.

கம்பராமாயணத்தில்வருஞ்சொற்பிரயோகங்களோ கணக்கிறந்தன. இயற்சொல்லுந் திரிசொல்லுமாக எத்தனையோ தென் சொற்களும் வடசொற்களும், பிறசொற்களும் பிரயோகிக்கப்பட்டிருக்கின்றன. தென் சொற்களுள்ளும் ஆக்கி அமைக்கப்பட்டன போலக் காணப்படும் ஆக்கச் சொற்களும் பல. அவை: வள்ளல், பனி, வலியர், முச்சடைமுதலியன. வள்ளல் பாம்பு, இது "சக்கிரி" என்னும் வடசொற் பொருளோக்கி வளை என்னும் பகுதிகூட்டி ஆக்கியசொல். வளைவுடையது என்பது பொருள். "வள்ளற்சேக்கைக்கரியவன்" (மிதிலைக்காட்) பன் + இ = பனி. சொல்லு எனப் பொருள்படும். "பாகடர்ந்த பனிக்கனிவாய்ச்சியர்" (நீர்விளை.) வலியர் என்பது குசலர் என்னும் வடசொற் பொருளோக்கி ஆக்கியது. "மதிதரு குமரரும் வலியர்கொல்" (திருவவதாரம்) முச்சடை-திரிசடை. விகாரப்படுத்திப் பிரயோகித்த விகாரச் சொற்களும் பல. அவை ஆளி, ஆளகம், கந்தாரம் முதலியன. ஆளி—அளி. ஆளகம்—அளகம்.

போலியெழுத்துப் பெறுவித்துப் பிரயோகிக்கப் பட்டிருக்குஞ் சொற்களும் பல. அவை எளிதர், பெரிதர், தேக்கர், மடன், சடன் முதலியன. எளிதர்—எளிது. பெரிதர்—பெரிது. "இருடேரப்பெளிதரோ" (உலாவியல்) "சிறிதரோ பெரிதரோ" (உலாவியல்) திருக்குறட் சொற்களும் பல. அவை ஊருணி, எக்கறவு, குறியெதிர்ப்பை முதலியன. இவ்வாறே வருந் தென்சொல் வகைகள்பல.

தென்சொல் என்று கருதுமாறு சித்திரமாகத் திரித்துப் பிரயோகித்திருக்கும் வடசொற்களும் பல. அவை அநாபம், ஆவுதி, ஆமிடம், முழுத்தம் முதலியன. சொற்பொருள் கூறிய வடசொற்களும் பல. அவை. சரயு, சாகரம், சானவி, பகீரதி, இராவணன் முதலியன. சரயு—சரசினின்று செல்வது. சரசு என்றது மானசவாவியை. சாகரம்—சகரர் தோண்டியது. சானவி—சன்னுமுனிவர் செவிவழியாய் வந்தது. பகீரதி—பகீரதன் கொண்டுவந்தது. இராவணன்—அழுதவன். தத்திதமாய் வந்த வடசொற்களும் பல. அவை சௌளம், தாசரதி, மாருதேயன், ஐந்திரம் முதலியன. சௌளம்—சூடாகரணம். தாசரதி—தசரதன் மகன். மாருதேயன்—மருத்தின் மகன். ஐந்திரம்—இந்திரனியற்றிய இலக்கணம். சந்தியோடு வந்த வடசொற்களும் பல. அவை திங்நாகம், நமோநாராயணுய முதலியன. திங்நாகம்—திக்கியானை. திக் + நாகம் = திங்நாகம். வடமொழித்தாதுவோடு சேர்த்து வகுத்து முடித்த சொற்களும் பல. அவை சங்கித்தல், (மீட்சி) வேதித்தல், (கிட்கிந்தை) முதலியன. இன்னும் புலப்பட்ட பிரயோகங்களைச் சமயம் வாய்ப்புழி எழுதுதும்.

அ. குமாரசுவாமிப் பிள்ளை.
சுன்னுகம், யாழ்ப்பாணம்.

தமிழ்ப்பழமை.

சிதம்பரம் ஆறுமுகநாவலர் கல்லூரியில் 12-2-18-ல் மாலை ருஉ-மணி முதல் அஉ-மணி வரையில், தமிழ்ப்பழமை என்ற பொருள்பற்றிச் சுவாமி, விருதை, சிவஞானயோகிகள் ஒரு பெருஞ்சொல்லியற்றினர். அதில் இந்நாடுமுதற் சங்ககாலத்தில் நான்குபக்கமும் கடலாற் சூழிப்பெற்று நாவலந்தீவு என்ற பேர்பெற்றிருந்தது. பின்னர் விந்தமலைக்கு வடக்கிலிருந்த கடலிலுள்ள பூமிமேற்கிளம்பி மலையாகி இமையமலை என்ற பேர்பெற்றது. இமையமலைதோன்றிய பின்னர்ப் பெர்சியாவிலிருந்து ஆரியர் இந்நாட்டுக்குவந்து குடியேறினர்.

மக்கள் முதலிற்றோன்றிய இடம் இப்போது இந்துமாக் கடலில் மூழ்கிக் கிடக்கும் லெமூரியா (தமிழகம்) என்பது ஆங்கில நூலாசிரியர் பலர் கொள்கை "பாண்டிநாடே பழம்பதி" என்பது முதலிய தமிழாசிரியர் கொள்கையும் அதை ஆதரிக்கின்றது. தமிழகத்திற்றோன்றி இயல்மொழியாகிய தமிழ்பேசிப் பல்கிப்பெருகிப் பலநாடுகளிற் சென்று குடியேறியதமிழர் அவ்வவ்விடங்களுக்குத் தக்கபடி பலவாறு மாறுபட்ட மொழிகள் படைத்துப்பேசி வெவ்வேறு சாதியார் ஆயினர். இந்நாட்டுக்கு மறுபடி திரும்பிவந்தவர்களில் ஆரியரும் ஒரு கூட்டத்தார் ஆவர்.

தமிழர் ஐந்திணை மாக்களாக எண்ணப்பட்டனர். ஆனால் சாதிவேற்றுமைகிடையாது. உலகம் நடைபெறுமுறையில் அந்தணர் அரசர் வணிகர் வினைஞர் என்ற தொழிலாளராயினர். தொழில்கள் முப்பகுப்பிற்பட்டபதினெண்வகையாயின. தமிழர் சைவ வைணவம்பற்றிக் கொலையையிழிவெனக் கொண்டவர். ஆரியர் வேள்விபற்றிய கொலையை உயர்வெனக் கொண்டவர். தமிழர் முப்பொருளுண்மை தேர்ந்தவர். ஆரியர் உயிர்மாயைகளுக்கின்மை கூறிப் பதியொன்றுக்கே உண்மை கூறுவர். ஆரியர் இருக்கு முதலிய வேதங்கள் தமிழ்த்தொல் காப்பியத்துக்குப் பிற்பட்டன வென்று நச்சினார்க்கினியர் முதலியர் கூறுகின்றனர். பல ஆராய்ச்சிக்காரர் இருக்குமுதலிய வேதகாலம் ஏறக்குறைய 5000 ஆண்டுகட்குமுன் என்று தீர்மானிக்கின்றனர்.

வைவசுவத மநு தமிழரசரென்று பாகவதமுதலிய புராணங்கள் கூறுகின்றன. வேதங்களுமதையொத் துரைக்கின்றன. மனுவழி வந்த சூரியகுலம் சந்திரகுலங்களும் தமிழர்க்குரியனவே. அவ்வழி வந்தவரே சேர சோழ பாண்டியர். ஆதலால் படைப்புக் காலந்தொட்டுத் தமிழ்மொழி உலகவழக்கில் நிலையுற்று வருகின்றது. ஆரியர்புகழ்ந்து கூறும் இருடிகளும் பேசியமொழி தமிழே.

வடமொழி ஆரியர் வேள்விமுதலிய எல்லாக் கிரியைகளுக்கும் வேண்டிய மந்திரங்கள் அமைத்து வைத்தற்கேற்படுத்தி நன்றாக்கப்பட்ட (சம்ஸ்கிருத) மொழி நெடுநாள் பரம்பரையாய் ஓதிவந்ததேயன்றி எழுதிவைக்கப்படவில்லை. அதனானே அதற்குரிய எழுத்தமைக்கப்படவில்லை. அத்தகைய வடமொழியில் பல அரியவிடயங்கள் எழுதி வைக்கப்பட்டுள்ளன.

தமிழில் எல்லா நூல்களும் நிரம்பி இருந்தன. முதலாவதூழி இரண்டாவதூழிகளில் அளவிறந்த நூல்கள் கடல் கொள்ளப்பட்டன. தமிழினின்று மொழி பெயர்க்கப்பட்ட வடமொழி யாகமங்களில் தமிழ் நூற்கள் பல உயிர்த்திருக்கின்றன. இவ்வாறு மிகச்சிறப்புடைய தமிழ் மொழியை இப்பொழுது போற்றுவாரில்லை. இக்காலத்தில் சிவாலயங்களைப் பழுதுபார்த்து நன்னிலையில் வைத்துப்போற்றும் நாட்டுக்கோட்டைப் பிரபுகள் தமிழ்நூற் கல்லூரிகள் வைத்து அவற்றில் தமிழ் இலக்கண இலக்கியங்களும தமிழ்மறையும் ஓதுவிப்பார்களானால் தமிழ் நன்னிலைமை யடையும். அவர்கள் புதுப்பித்த சிவத்தளிகளை முறையில் தொழும் அடியார் தொகையும் பெருகும்.

ஆறுமுக நாவலரவர்கள் தமிழ்ப்பாடசாலை யேற்படுத்தி யிருப்பது கொண்டாடத்தக்கது. இப்பொழுது ஷியார் பரம்பரையில் வந்த திரு

வன் பொன்னம்பலம்பிள்ளை அவர்கள் கல்லூரியமைத்து அதில் வித்துவான் வகுப்பு ஏற்படுத்தி நடத்தல் மிகப் போற்றத்தக்கது.

இத்தென்னிந்தியாவில் இத்தகைத் தமிழ்க்கல்லூரிகள் நூற்றுக்கதிகம் இருக்கவேண்டும் என்ற விபரமாய்ப் பலமேற் கோள்களோடு அவையார் கழிபேருவகையெய்தப்பெருஞ் சொல்லியற்றப்பட்டது.

கல்லூரித் தலைவர் திருவன் பொன்னம்பலம்பிள்ளை யவர்கள் புகழ்ந்துபேசி யோகிகளுக்குப் பூமாலைசூட்டினர். தமிழ் மறையிசை யமுதமாரிபொழிந்தது. களிப்போடவை கலைந்தது.

த. ஆ. வேங்கடாசலம்.

இளமையிற்கல்.

கல்வியின் சிறப்பைக் கற்றுணர்ந்தோரே அறிவார். அரிய மாணிக்கத்தின் மதிப்பை அதிற் பழகினோரே அறிவர். கண்ணில்லாதார்க்கு விளக்குளதால் பயனென்னை? நிற்க.

கேடில்விழுச் செல்வமாகிய கல்வி இல்லாதார் வாசனையற்ற முருக்கம்பூவை நிகர்ப்பார். "மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்" என்று சான்றோர் கூறியிருந்தால் இதைவிடக் கற்றோர் பெருமையை எடுத்துச் சொலல் மிகையாம்.

இப்படித்தாய கல்வியைக் கற்குங்காலம் இளம்பருவமேயாம். குமாரப்பருவத்தே பசிநோய் காமநோய்கள் தணிக்க மிக்க பொருள்தேடலாற் றுன்பமும் மனக்கவலையும் மேலிடலால் கல்வியில் எங்ஙனம் மனம் பற்றும். பொருட்குறையின்றிக் காலம் கழிப்போர்க்கும், குடும்ப விவகாரங்கள் பல வந்துவிடுகின்றன. இருக்கும் பொருள் முதலியவற்றைக் காத்தற்கு இடைவிடா முயற்சி வேண்டியதாகின்றது. ஆகையால், பாலப்பருவமே கல்வி கற்றற்கு ஏற்றது. ஓர் மூங்கிலை இளைதாக இருக்கும்போதே வளைத்தால் அதுவளைந்து பல்லக்கின் மேல்விதானம் கட்டற்குரியதாய் அரசர் முதலியோர் முடிக்குமேல் விளங்கிச் சிறப்புறும். வளையாதமூங்கில் கழைக்கூத்தர் கையிலகப்பட்டு அவர்கள் காலின்கீழ்க் கிடக்கின்றன. அதுபோல இளமைப் பருவத்தே உபாத்தியாயர்கட்குக் கீழ்ப்படிதல் பாடம்போற்றல் முதலியவற்றால் கஷ்டமடைந்து கல்விகற்றவர்களே இப்போதும் பிரத்தியக்ஷமாக மேனிலையி லிருக்கிறார்கள்.

அங்ஙனம் உபாத்தியாயர்க்குக் கீழ்ப்படியாமலும் பாடத்தைக் கவனித்துப் படிக்காமலும் இருந்த துஷ்டப்பிள்ளைகள் இப்போதே திருஷ்டாந்தமாகக் கஷ்டவேலைசெய்து ஜீவிக்கிறார்கள்; அதுவன்றி, ஐயோ இளமைப்பருவத்தே கற்காது போனோமே என்று கற்றோரைப் பார்த்து ஏங்குகின்றனர். ஆகையால், சிறுவர்காள்! நமது ஔவைப்பிராட்டியாரின் அமுதவாக்காகிய "இளமையிற்கல்" என்பதைமறவாது நீங்களும் இளம்பருவத்தே கற்கவேண்டியவற்றை முறைப்படி கற்றுத்தேர்ந்து கனம்பெறுவீர்களாகுக.

S. K. கோவிந்தசாமிப்பிள்ளை,
விழுதியூர்.

வைத்தியக்குறிப்பு.

(பிணிகளின் சூக்ஷுமம், ஔடதம் இவைகளின் பலவகைக் குறிப்புகள்.)

தேகத்திற் சிரசே பிரதானம். ஆதலின், முதலிற் றலைவலையைக் கவனிப்பாம். பலநோய்கள் வருதற்குத் தலைநோய் ஓர் அறிகுறியாம். அத்தலைவலியும் பல பிரிவுகளுடைத்து.

க-வது. தலைத் தசைகளைப்பற்றியது.
உ-வது. எலும்பின்மேல் மூடிக்கொண்டிருக்கிற சவ்வைப் பற்றியது.
ந-வது. பரிச நரம்புகளைப் பற்றியது.
ச-வது. இரத்தம் மூளையில் சேர்ந்து காணுவது.
ரு-வது. அக்கினி மந்தத்தினால் காணுகிறது.
சு-வது. மூளையின் வியாதியால் காணுகிறது.

இவைகளில் ஒவ்வொன்றின் குறிகுணங்களைப்பற்றித் தெளிவாக எழுதிச் சிகிச்சைசெய்யும்விதமும் எழுதுவதாக இருந்தால் விரியும் ஆனதினால் எந்த வியாதிகளைப்பற்றி யெழுதினாலும், விரிவுபடாமல் சிகிச்சை செய்யும் மார்க்கமாத்திரம் சுருக்கமாகவும் தெளிவாகவும் எழுத எண்ணங்கொண்டிருக்கிறேன் சிலசமயங்களில் இடை இடையே வியாதியின் தன்மையையும் சொல்லவும் கூடும்.

முன்குறிப்பிட்டிருக்கிற ஆறுவிதத் தலைவலி ரோகங்களையும் தொந்தரோகங்களையும் விளக்கமாகச்சொல்லி இவைகளுக்கு உள்ளுக்கும் வெளிக்கும் உபயோகிக்கக்கூடிய மருந்துகள் வெளியிடுவோம். (இந்து முறைகள் பல. சில ஐரோப்பிய முறைகளுங் கலக்கும்)

பலகாரணங்களினால் தலைவலி உண்டாகக்கூடும் அதன் உற்பத்திக்குக் காரணம் இன்னதென்றும் இன்னவகைத் தலைவலியென்றும் தெரிந்துகொண்டு அதற்குத்தகுந்த சிகிச்சை செய்விக்கவேண்டியது.

110

சிகிச்சைவிதி: (பொது)

க. அவரவர்கள் தேகநிலைமைக்குத் தகுந்தபடி பேதிக்குச் சாப்பிடுவது பிரதானமான செய்கை.

உ. அதிகாலையில் காணும் தலைவலிக்கு இரண்டு கைகளையும் மேல்உயரத்தூக்கி வைத்துக்கொண்டிருந்தால் சௌக்கியமிருக்கும்.

ங. குளிர்ந்த ஜலமாவது மாதர் பாலாவது பசும்பாலாவது தலை, நெற்றி, பொறி, இவ்விடங்களில் துணியில் நனைத்துப்போட்டுக்கொண்டுவரச் சுகமுண்டு.

ச. கழுத்துப்பின் பிடர்மேல் குடுவைப் பிடியிடுவதாலும் குணமுண்டு.

ரு. கடுகையாவது சுக்கையாவது அரைத்துத் துணியில் தடவி நெற்றி, பொறி, பிடர் இவ்விடங்களில் போடவே குணமாம்.

சு. வயிற்றில் ஆகாரம் நிறைந்திருக்கையில் தலைநோய் கண்டால் இலேசான வாந்திக்குக் கொடுத்து வயிற்றிலிருப்பதை வெளிப்படுத்தி விடவேண்டியது.

எ. மலக்கட்டினால் கண்டால் விரேசனத்துக்கு (பேதிக்கு)க் கொடுக்கவேண்டியது.

அ. நொச்சியிலை, வேப்பிலை, தும்பையிலை இவைகளைத் தண்ணீரில் கொதிக்க வேகவிட்டு அதில்வரும் நீராவியை வேது பிடிக்கச் செய்யவேண்டியது ஆவியடங்கிவிட்டால் செங்கல்லைப் பழுக்கக்காய்ச்சி அந்நீரில்போட மறுபடியும் ஆவிபிறக்கும் அந்த ஆவி பிடிக்கவேண்டியது. இன்னும் வேண்டுமானால் இருமுறையும் செய்துகொள்ளலாம்.

கூ. மாவிலிங்கப்பட்டையை இடித்து வறுத்துச் சிரசு, பொறி, பிடர் இவைகளுக்கு ஒத்தடமிடச் சுகந்தரும்.

க0. மிளகை முலைப்பால்விட்டு அரைத்துக் கொதிக்கவிட்டு நோயிருக்கிற விடத்தில் பூசினால் சௌக்கியமாகும்.

(தொடரும்)

சி. வீரட்டநாதப்பிள்ளை,
வைத்தியர் குளத்துமேடு, புதுவை.

புதுவை—சைகோன் சின்னையா பிரஸ்.